Opferhilfe
beider Basel

# பாசெலில் பாதிக்கப்பட்டோருக்கான உதவி

## தகவல் பத்திரம்

1.01.1993 தொடக்கம் குற்றச்செயல் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான (OHG) கூட்டுமாநில சட்டம் அமுலுக்கு வந்தது. பாதிக்கப்பட்டவர் என்பது சட்டத்தின் படி குற்றச்செயல் மூலம் ஒருவரின் உடலை சேதப்படுத்தபபட்டால், பாலியல் துர்பிரயோகத்திற்கு உள்ளாகியிருந்தால், நேரடியாக மனப்பயம் அல்லது அழுத்தம் போன்ற குற்றச்செயல் மூலம் பாதிப்பு ஏற்பட்டிருக்குமானால் இது OHG சட்டத்தின் படி இவரை பாதிக்கப்பட்டவராக கருதப்படும். மேலும் ஒரு குறிப்பிட்ட நிபந்தனையின் படி பாதிப்புக்குள்ளானவரின் உறவினர்களுக்கும், நெருங்கியவர்களுக்கும் இந்த பாதிப்புக்குள்ளானவருக்கு கிடைக்கும் அதேபோன்ற உரிமை வழங்கப்படும்.

OHG சட்ட அடிப்படையில் வன்முறையினூடாக பாதிக்கப்பட்டவருக்கு பலதரப்பட்ட சட்ட உரிமைகள் உள்ளன.

- இலவசமாக அறிவுரையும் ஆதரவும்
- குற்றஞ்செயலுக்கு எதிராக பொலிஸ் நடவடிக்கை எடுப்பதற்கும் நீதிமன்றத்தில் வழக்கு போடுவதற்கும் உரிமை உள்ளது
- பொருளாதாரம்/ பண உதவி (நட்டஈடு)

OHG சட்டப்படி நீங்கள் (பொலிஸ்சில்) மனு தாக்கல் செய்யாத பட்சத்திலும் கூட அல்லது மனு செய்ய விருப்பம் இல்லாத பட்சத்தில் கூடவும் உங்களுக்கான உரிமையை பெற்றுக்கொள்ளலாம்.

### 1. அறிவுரை

பாசெலின் பாதிக்கப்பட்டோருக்கான உதவி கண்டோன்களுடாக பாசெல் நகரத்திலும், பாசெல் மாநிலத்திலும் வேண்டுகோளுக்கமைய வழங்கப்படுகிறது.
பூாசெலின் பாதிக்கப்பட்டவர்களுக்காக உதவி இலவசமானது. இது பாதிப்பு ஏற்பட்ட நேரத்தில் தங்கியில்லை, காலம் கடந்த பின்னரும் பெற்றுக்கொள்ளலாம். வன்முறையூடாக பாதிக்கப்பட்டு நீண்ட காலத்திற்கு பின்னரும் நீங்கள் எம்முடன் தொடர்பு கொண்டு பதியலாம். நீங்கள் வன்முறையையிட்டு இதுவரை எதுவித மனு தாக்கல் செய்யாத போதும் அல்லது காலம் கடந்து மனு செய்ய விரும்பும் போதும் யார் உங்களை சேதப்படுத்தினார் என்று தெரியாத போதும் அல்லது உங்களை சேதப்படுத்தியவருக்கு எதிராக குற்றவியல் சட்டபடி எதிர் நடவடிக்கை எடுக்காத போதும் அல்லது சேதப்படுத்தியவருக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னும் இலவசமாக அறிவுரை பெற உங்களுக்கு உரிமையுண்டு. இதே போல் அனைத்து அறிவுரை பெறும் உரிமை வன்முறையூடாக பாதிக்கப்பட்டவரின் உறவினருக்கும் நெருங்கியவர்களுக்கும் உண்டு.
பாசெலில் பாதிப்புக்குள்ளானவர்களுக்காக உதவி வழங்கும் ஊழியர்கள் அடிப்படையாக உங்கள் விடையங்களை வெளியில் சொல்லமாட்டார்கள் (மௌனம் காப்பார்கள்). ஒவ்வொருவரும் தமது உரிமையை அதாவது குற்றச் செயலுக்கு எதிராக மனு செய்வதானால் அல்லது மனு செய்யவில்லை என்ற தீர்மானத்திற்கோ மதிப்பு அளிப்பார்கள். உங்களது பெயரை குறிப்பிடாமலும் அறிவுரையை பெற்றுக்கொள்ளலாம்.

### 2. சட்டபடி பொலிஸ் அல்லது நீதிமன்ற வழக்குக்கான உரிமை

வன்முறையூடாக பாதிக்கப்பட்டவர் என்ற முறையில் பின்வரும் உரிமைகளை பெறலாம்.

- உங்களை சேதப்படுத்தியவரை நீங்கள் பார்க்காமல் இருக்க வேண்டும் என்று கேட்டக்கொள்ளலாம். இந்த விருப்பத்தை ஒரு சில சந்தர்ப்பத்தில் மட்டும் தான் காரியாலயம் நீராகரிக்கும்.
- உங்களின் அனைத்து விசாரனைகளின் போதும் உங்களுக்கு நம்பிக்கையான ஒருவரை அருகாமையில் அழைத்துக்கொள்ளலாம்.
- நீங்கள் பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டு இருக்கையில் அதையிட்டு வாக்குமூல விசாரனை செயயப்படும் போது உங்களை மேலும் அந்தரத்துக்குள்ளாக்கும் வகையில் இருக்கையில் இதை நீங்கள் தவிர்த்துக்கொள்ளலாம். இதற்காக நீங்கள் பொலிஸிலும் அரசதரப்பு சட்டதரணியிடமும் விசாரனையின் போது நீங்கள் பெண்ணானால் நீங்கள் ஒரு பெண் மூலம் விசாரனை செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளலாம்.

இதைவிட உங்களுக்கு தனிப்பட்ட குற்றமனு செய்யும் முறையில் இந்த குற்றவியல் வழக்கில் கலந்துக் கொள்ளுவதற்கும் மானநட்ட ஈடு தருமாறு வேண்டிக்கொள்ளவும் அத்துடன் இதற்கு ஈடு செய்யும் வகையில் பதில் நடவடிக்கை செய்யுமாறு கேட்கவும் உரிமை உண்டு. இதற்காக நீங்கள் பொலிஸாரிடம் மற்றும் அரசதரப்பு சட்டதரணியிடம் முடிந்தளவிற்கு முற்கூட்டியே இதையிட்டி தெளிவான ஒரு விளக்கத்தை கொடுக்க வேண்டும் அல்லது ஒரு விண்ணப்பம் செய்ய வேண்டும். (குற்றச்செயலில் உங்கள் விண்ணப்பத்தின் அடிப்படையில் மட்டும் இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை செய்கையில் சம்பவம் நடைபெற்று 3 மாதத்திற்குள் செய்யப்பட வேண்டும்) தனிப்பட்ட நபராக குற்றமனு செய்வதை தவிர்க்கையில்

அல்லது தண்டனை வழங்குமாறு விண்ணப்பம் கொடுப்பதை தவிர்த்து கொள்ளும் போது இதையிட்டி பிற்காலத்தில் எந்த வித நடவடிக்கையும் எடுக்க முடியாது. இது உங்களது இறுதி முடிவாகி விடும்.

நாங்கள் ஒரு அறிவுரை வழங்கும் சந்தர்ப்பத்தில் இதையிட்டி முழுமையாக விளக்கம் அளிப்பதுடன் உங்களது உரிமையையிட்டியும் அறிவுரை வழங்குவோம். இவ்வேளையில் நாங்கள் உங்களுக்கு உதவி செய்வோம், உங்களது உரிமைகளை பெறவும் அதற்கான சட்டதரணியை நீங்கள் பெற்றுக்கொள்வதற்கும். அனைத்து குற்றவியல் செயல் (வழக்கு) நடைமுறையின் போது உங்களுக்கு தேவையான தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக தகவல் பத்திரத்தை கவனத்தில் கொள்ளவும். என்ன நீங்கள் குற்றவியல் நடவடிக்கையின் போது தெரிந்து இருக்க வேண்டுமோ, பாசெல் பாதிக்கப்பட்டோருக்கான உதவி நிலையம் தொலைபேசி 061 205 0910 தொடர்பு கொண்டு அல்லது எமது இணையத்தளமூடாக www.opferhilfe-bb.ch அறிந்துக்கொள்ளலாம்.

**முக்கிய தகவல்கள்**
தண்டிக்குமாறு கொடுக்கும் விண்ணப்பத்தினூடாக மட்டுமே குற்றவாளிக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கும் குற்றச்செயல்களில், நீங்கள் கண்டிப்பாக இக் குற்றச்செயல் நடந்து **3 மாதத்திற்குள்** இக்குற்ற செயலை தண்டிக்குமாறு விண்ணப்பம் கொடுக்க வேண்டும்.

## 3. பொருளாதார/ பண உதவி

**உடனடி உதவி**
செயல் நடந்த நேரத்திலோ அல்லது வருமானத்திலோ தொடர்பின்றி வன்முறையினால் பாதிக்கப்பட்டவரின் விளைவுக்கான செலவை காரியாலயச்சிரமம் இன்றியும் உடனடியாகவும் பாசெல் பாதிக்கபட்டோருக்கான உதவி வழங்கும் நிலையத்தினூடாக ஏற்றுக்கொள்ளப்படும். உதாரணமாக மருத்துவ செலவிற்கான உதவி, மொழிபெயர்ப்பாளருக்கான செலவு, கடின குழப்ப நிலையிலான உதவி, பாதுகாப்பு சம்பந்த விடையம், பயணச் செலவு, சட்டவிளக்க உதவி, அவசர தங்கும் வசதி.

**நீண்ட கால உதவி**
இவ்வாறான உதவியை பெறுவதற்கு சட்டத்தினால் வரையறுக்கப்பட்ட வருமானத்தின் எல்லையை தாண்டி இருக்க கூடாது. அத்துடன் உங்கள் தனிப்பட்ட பொருளாதார நிலைமையிலும் உங்களுக்கு உங்களது வேறு நிபுணர்கள் மூலம் உதாரணமாக மன அழுத்த நிபுணர்களோ அல்லது சட்டதரணியின் செலவுகளை ஏற்றுக்கொள்வதா அல்லது இல்லையா என்பது மேற்கருதப்பட்ட விடையத்தில் தங்கியுள்ளது. இப்படியான உதவிக்கான செலவை பெறுவதானால் முற்கூட்டியே இவர்கள் இந்த செலவை ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்ற விண்ணப்பத்தை அனுப்பி வைக்க வேண்டும். நாங்கள் இந்த OHG சட்டபடி நீண்ட கால உதவிக்கான செலவை பெறுவதற்கான விண்ணப்பத்தை செய்ய உதவி செய்வோம்.

## 4. நட்ட ஈடும், இழப்பை பூர்த்தி செய்தலும் (ஒரு வித பிராயசித்தம்)

**நட்டஈடு**
ஏற்பட்ட பாதிப்புக்காக OHG சட்டபடி முழுமையான நட்ட ஈடு வழங்குதல் அல்லது கூடியளவு ஏற்பட்ட இழப்பை (வேதனையை) ஈடு செய்யும் நடவடிக்கை. நட்ட ஈட்டையும் இழப்புக்கான திருப்தி செய்யும் ஈட்டையும், இழப்பை ஏற்படுத்தியவர் அல்லது அவரது காப்புறுதி ஈடு செய்யாத பட்சத்தில் மட்டும் குற்றஞ்செய்தல் நடந்த கண்டோனினால் நட்டஈடு வழங்கப்படும். இழப்பிற்காக நட்டஈடு வழங்குதல் உங்கள் வருமான எல்லையில் தங்கியுள்ளது. நீங்கள் ஒரு பாதிக்கப்பட்டவர் என்ற நிலையில் ஒரு பகுதி பணத்தை உடனடியாக தருமாறு கேட்டுக்கொள்ளலாம்.

**இழப்பை ஈடுசெய்தல்**
ஈடு செய்தல் என்பது உடல், மன சேதத்தின் இழப்பை திரும்பி ஈடு செய்வதற்கான பண உதவி, இதை ஈடு செய்யும் தொகை பாதிக்கப்பட்டவரின் வருமானத்தின் அளவில் தங்கி இல்லை. நட்ட ஈடு செய்தல் மேலும் இழப்பை ஈடு செய்தல் போன்ற விடையத்திற்கு குற்றச்செயல் நடந்த கண்டோனே பொருப்பாகும். பாசெல் நகரத்தின் சமூக உதவிக்கான காரியாலயமும் (Amt für Sozialbeiträge) பாசெல் மாகாணத்திற்கான பாதுகாப்பு தலைமை நிலையம் லிஸ்ரால் பொருப்பாகும் (Sicherheitsdirektion in Liestal).

நீங்கள் நட்ட ஈடுக்காக அல்லது இழப்பிற்கான விண்ணப்பம் செய்ய விரும்பினால் நாங்கள் உங்களுக்கு இவ்விடையத்தில் உதவி செய்வோம்.

**முக்கிய குறிப்பு**
நட்ட ஈட்டிற்கான உரிமையையும் இழப்பை ஈடு செய்யும் உரிமையும் **பாதிப்புக்குள்ளான செயல் நடந்து 5 வருடங்களுக்குள்** குற்றச்செயல் நடந்த கண்டோனில் கோரவேண்டும். இக்காலத்திற்கு பின்னர் எந்த உரிமையையும் கோர முடியாது. (உரிமை கோரும் காலம் கடந்து விட்டது)


Opferhilfe beider Basel, Steinenring 53, CH-4051 Basel, Tel. 061 205 09 10, Fax 061 205 09 11, info@opferhilfe-bb.ch